# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2475/33 - 2026 පෙබරවාරි මස 13 වැනි සිකුරාදා - 2026.02.13

2475/33 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 4-3/13/2020/PC/293.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

கடத்திரல் வரைபட இல. - 910182
தொகுதி இல. - 05
தாள் இல. - 02
அமைப்பு -
கிராமம் : அராலி மத்தி J/161
பிரதேச செயலாளர் பிரிவு :
வலிகாமம் மேற்கு, சங்கானை.
மாவட்டம்: யாழ்ப்பாணம்
மாகாணம்: வடக்கு மாகாணம்

1. துண்டு இல. 1
காணியின் பெயர்: தும்பளை; விபரம்: நிரந்தரக் கட்டடம் 02, சீமெந்து கிணறு 02, மேல்நிலை நீர் தொட்டி 01; உரிமை கோருவோர்: சுதேச மருத்துவத் திணைக்களம், வடக்கு மாகாணம்; விஸ்தீரணம்: 0.4085 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர்




*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

திருமதி கவிதா உதயகுமார்,
பிரதேச செயலாளர்,
வலிகாமம் மேற்கு சங்கானை.

பிரதேச செயலகம்,
வலிகாமம் மேற்கு சங்கானை,
2026, பெப்புருவரி 11.

EOG 02 - 0106

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது தொடர்பு இல.: LA/1774.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் இல.: 03J/84/LG/28.

2026.01.09 ஆந் திகதிய 2470/55 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1ஏ பக்கத்தில் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் பிரிவு - 07 இன் கீழான அறிவித்தலில் காணியின் விஸ்தீரணம் 1.054 ஹெக்டயார் என்பதற்கு பதிலாக 1.0746 ஹெக்டயார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே "1.0746 ஹெக்டயார்" இற்கு பதிலாக "1.054 ஹெக்டயார்" எனத் திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

கு. பிரபாகரமூர்த்தி,
பிரதேச செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு,
சண்டிலிப்பாய்.

பிரதேச செயலகம்,
வலிகாமம் தென்மேற்கு,
சண்டிலிப்பாய்,
2026, சனவரி 28.

EOG 02 - 0107

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.